மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

7. அறிவிப்பு

(ஆ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 20 – வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 20 – வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். பூங்கொத்து கொடுத்ததற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.